# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்
## 15.03.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் மூஃமினூனின் 107 முதல் 112 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

நான் கடந்த வார ஜுமுஆ குத்பாவின் தொடக்கத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மேற்கோளைப் படித்தேன். அதில் துஆ என்றால் என்ன? துஆவின் மூலம் எவ்வாறு திருப்தியும் அமைதியும் கிடைக்கும்? துஆவின் தத்துவம் யாது? துஆ எவ்வாறு கேட்க வேண்டும்? அதாவது ஒரு மூஃமின் மேற்கொள்ள வேண்டிய துஆவின் தரம் யாது? என்பதை எடுத்துரைத்தேன்.

உண்மையில் துஆவின் இந்த ரூஹும், தத்துவமும் திருக்குர்ஆனில் கூறப்பட்டவையாகும். இது திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து அறிவைப் பெற்று விரிவாக நம்முன் எடுத்து வைத்துள்ளார்கள். இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மேலும் சில மேற்கோள்கள், கூற்றுகள் உள்ளன. அவை மிகவும் சுருக்கமான கூற்றுகள் ஆகும். ஆனால் துஆ செய்வதற்கும், துஆவின் உண்மைத்துவத்தைத் தெரிந்து கொள்வதற்கும் எப்படிப்பட்ட வழிமுறைகளும் உள்ளன என்றால், இதன்படி செயல்பட்டு மனிதன் இறைவனது நெருக்கத்தை பெறக்கூடியவனாகவும், துஆவின் உண்மைத்துவத்தை அறியக் கூடியவனாகவும் ஆகி விடுவான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஒரு மஜ்லிஸில் கூறுகின்றார்கள்:**

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு மனிதன் தனக்குள் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். தீமையிலிருந்து விலக முடியவில்லை என்றால், இறைவனால் விதிக்கப்பட்ட வரம்புகளை மீறினான் என்றால், துஆவில் எந்த விதமான விளைவும் ஏற்படாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இன்னொரு சந்தர்ப்பத்தில் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு ஓர் அர்ப்பணம் தேவைப்படுகிறது. நாம், நமது ஜமாஅத்திற்கு இதில் நிலைத்து நிற்கும்படி மீண்டும் மீண்டும் கூறுகின்றோம். ஏனென்றால், எப்போது வரை உலகத்திலிருந்து விலகி, அதன் அன்பு உள்ளத்திலிருந்து குளிர்ந்து, அல்லாஹ்வுக்காக இயல்புகளில் இயற்கையான ஓர் எழுச்சியும், அர்ப்பணிப்பும் உண்டாகாதோ அப்போது வரை முன்னேற்றம் கிடைக்காது.

அதாவது, இயல்பான எழுச்சிதான் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தும். மேலும் அதனை உறுதிப்படுத்தும். ஆக, இந்த இயல்பான எழுச்சியை உருவாக்கவும், முழுமையான முறையில் நாம் இறைவன் பால் கவனம் செலுத்தவும் முயற்சி செய்ய வேண்டும். இந்த இயல்பான எழுச்சி இறை அருளால்தான் உண்டாகும். இறைவனிடம் துஆ கேட்கும் போதுதான் கிடைக்கும்.

**பிறகு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

துஆக்களில் இறைவன் பக்கம் முகம் திருப்பியவாறு கவனம் செலுத்தினால் பிறகு இதில் வழக்கத்திற்கு மாற்றமான தாக்கம் ஏற்படும். ஆனால் இதனை நினைவில் கொள்ள வேண்டும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல் இறைவனிடமிருந்துதான் வருகிறது. துஆக்கள் செய்வதற்கும் ஒரு நேரம் இருக்கின்றது. எவ்வாறென்றால் சுபுஹ்வில் ஒரு குறிப்பிட்ட நேரம் உள்ளது. அந்த நேரத்திற்கு ஒரு சிறப்பு இருக்கின்றது. அவை ஏனைய நேரங்களில் இருப்பதில்லை.

இதனைப் போன்றே துஆக்களுக்கு வேறு சில நேரங்களும் இருக்கின்றன. அந்த நேரங்களில் துஆ ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மேலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மனிதன் காலை நேரத்தில் புத்துணர்ச்சியுடன் செய்யும் வேலையின் விளைவும் மிகவும் சிறந்ததாக இருக்கும். இன்றைய காலத்தில் இரவு

முழுவதும் அல்லது வெகு நேரம் வரை இன்டர்நெட்டில் உட்கார்ந்திருக்கக்கூடிய அல்லது டி.வி.க்கு முன்னால் உட்கார்ந்திருக்கக்கூடிய அல்லது வேறு சில உலகப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்த மக்களைப் போன்று கிடையாது. காலை வரை அவர்களுக்கு இரவின் தூக்கம் முழுமை அடைந்திருக்காது. காலையில் எழுவார்கள். அரைகுறை உறக்கத்துடன் என்ன தொழுவார்கள்? மற்ற காரியங்களில் அருள் எவ்வாறு உண்டாகும்? ஒவ்வொரு மனிதனும் அவர் உலகவாதியாக இருந்தாலும் சரி, தனது சிறந்த பணிக்காக புத்துணர்வுடன் செயல்படத்தான் முயற்சி செய்வார். ஏனென்றால் இதன் மூலம் முழுமையான கவனத்துடன் வேலை நடைபெற வேண்டும். அந்த வேலையில் நல்ல விளைவுகள் வெளிப்பட வேண்டும் என்பதனால் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் உங்களுடைய சிறந்த துஆக்களின் நேரம் எது? துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான உணர்வு எப்போது ஏற்படுகிறது? என்பதைத் தேட வேண்டும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இது அல்லாஹ்வுடைய அருளால் ஏற்படுகிறது. துன்பம் ஏற்படும் போது பயப்படுவதைப் போல் அமைதியான நிலையில் பயப்படக்கூடிய மனிதர் மீது அல்லாஹ்வின் கருணை உள்ளது. அமைதியின் நேரத்தில் இறைவனை மறக்காமல் இருப்பவரை இறைவன் துன்பத்தின் நேரத்தில் மறக்கமாட்டான். எவர் அமைதியின் நிலையை இன்பத்துடன் கழிப்பாரோ, துன்பத்தின் போது துஆ செய்வாரோ அவருடைய துஆவும் ஏற்றுக் கொள்ளப்படாது.

இறைவனது தண்டனை இறங்கும் போது தவ்பாபின் கதவு அடைக்கப்பட்டு விடுகிறது. இறை தண்டனை இறங்குவதற்கு முன்பாக துஆக்களில் ஈடுபடக்கூடியவர், தர்மங்கள் செய்யக்கூடியவர், இறை கட்டளைகளை முழுமையான கண்ணியத்துடன் பேணுவதற்கு முயற்சி செய்யக்கூடியவர், அல்லாஹ்வின் படைப்பினங்களின் மீது பரிவு காட்டுபவர், தனது அமல்களை கவனத்துடன் செய்து வருபவர் எவ்வளவு நற்பேறு பெற்றவர் ஆவார்! இதுதான் நற்பேற்றின் அடையாளமாகும்.

மரம் அதன் கனிகளைக் கொண்டு அறியப்படுகிறது. அதனைப் போன்று நற்பேறு பெற்றவர் துர்பாக்கிய மனிதனைப் பிரித்தறிவது எளிதாகும். அதாவது நல்ல இயல்புடையவரின் நற்செயல் இனிப்பாக உள்ள கனியைப் போன்றதாகும். மேலும் சுவை மிகுந்ததாகும். அதனை சுவைப்பவர் அதன் பழங்களைக் கண்டவாறு இது இனிப்பான கனிகளைத் தரக்கூடிய மரம் என்று கூறுவார். துர்பாக்கிய மனிதன் ஒரு தீய இயல்புடையவன் ஆவான். அவனது அமல் அல்லாஹ்வுக்குரிய கடமைகளைச் செய்யக் கூடியதாகவும் இருக்காது. அவனது அடியார்களுக்குரிய கடமைகளைச் செய்யக் கூடியவதாகவும் இருக்காது. அது கசப்பான, துர்நாற்றம் வீசக்கூடிய கனியைத் தரும் மரம் ஆகும்.

ஆக, நான் இந்த சில மேற்கோள்களை எடுத்துரைத்துள்ளேன். ஏனென்றால் நமக்கு இறைவனது தொடர்பைப் பற்றிய அறிவு மேலும் அதிகரிக்க வேண்டும். துஆக்களுடைய ஒழுக்கமுறைகளும், வழிமுறைகளும் தெரிய வேண்டும். நமக்கு நமது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும். நல்லது, கெட்டது ஆகியவற்றிற்கிடையிலுள்ள வித்தியாசத்தைக் கண்டு நாம் நற்செயல்களின் பக்கம் கவனம் செலுத்தக் கூடியவர்களாக வேண்டும். துஆவின் சரியான வழிமுறையை மேற்கொண்டவாறு நமக்கு துஆக்களின் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும் என்பதனால் ஆகும். இதன் மூலம் நாம் இவ்வுலக ஹஸனாவில் பங்கு பெறக்கூடியவர்களிலும் மறுமையின் ஹஸனாவில் பங்கு பெறக் கூடியவர்களிலும் இணைய வேண்டும். மேலும் இதன் மூலம் நாம் சுய மற்றும் ஜமாஅத்தின் குறிக்கோள்களை அடைவதில் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக வேண்டும்.

ஆக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்ட, காலத்தின் இமாம் மஸீஹ் மற்றும் மஹ்தியின் பைஅத்தில் இணைவதற்கு நற்பாக்கியம் பெற்ற ஒரு முஸ்லிமிற்கு இது முக்கியமான விசயமாகும். இந்த விசயங்களைப் புரிவதற்கும், அமல் செய்வதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

இதன் மூலம் உண்மையான மூஃமின் மற்றும் வெறும் மூஃமினுக்கான வாதம் புரியக்கூடியவர்களில் வேறுபாடு வெளிப்பட வேண்டும். உண்மையான மூஃமின் யார்? வெறும் மூஃமின் என்று வாதம் புரியக்கூடியவர் யார்? என்பது தெளிவாக வேண்டும். திருக்குர்ஆன் பல்வேறு இடங்களில் துஆக்களைப் பற்றி விளக்கி இருக்கின்றது. நாம் அதனை புரிவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நான் கூறியது போன்று இதற்கு நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பார்வையில் பார்ப்பது அவசியமாகும். இதன் மூலம் நாம் துஆவின் ஞானம், தத்துவம், துஆ செய்யக்கூடிய வழிமுறைகளைப் புரிந்து கொண்டு துஆவின் பால் கவனம் செலுத்துபவர்களாக வேண்டும். துஆவின் பக்கம் மட்டும் கவனம் செலுத்தக்கூடியவர்களாக இல்லாமல் விளைவு தரக்கூடிய துஆக்களைச் செய்ய முயற்சி செய்யக் கூடியவர்களாக வேண்டும். அதாவது விளைவுகள் வெளிப்படக்கூடிய துஆக்களைச் செய்யக் கூடியவர்களாக வேண்டும். ஏனென்றால் இவை இல்லாமல் வாழ்க்கை குறிக்கோளற்றதாகும்.

விளைவு தரக்கூடிய துஆக்கள் மனிதன் தனது வாழ்வை சீர்படுத்திக் கொள்வதற்கு அவசியமானவையாகும். இறைவனுக்கு நாம் அவனை வணங்குகின்றோமா? இல்லையா? அவனிடம் ஏதாவது வேண்டுகின்றோமா? இல்லையா? என்பதன் தேவையில்லை. இறைவனது கட்டளைக்கேற்ப செய்யப்படும் துஆக்களின், கனிகள் தரக்கூடிய துஆக்களின் தேவை நமக்கு இருக்கின்றது. இறைவனுக்கு அதன் தேவை இல்லை. அவன் தேவைகளற்றவன் ஆவான்.

எனவே இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக இதனை அறிவிக்கின்றான்:

قُلْ مَا يَعْبَؤُا بِكُمْ رَبِّي لَوْلَا دُعَاؤُكُمْ

*நீர் கூறுவீராக! நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் எனது இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். (25:78)*

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பிறருக்குப் பயன்தரக் கூடியவர் தான் முழுமையான இறை அடியாராக முடியும். ஆனால் இந்த வசனத்தில் இன்னும் தெளிவாக உள்ளது. விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளது. அதாவது இந்த மக்களிடம் கூறுங்கள். நீங்கள் இறைவனை அழைக்கா விட்டால் எனது இறைவன் உங்களை ஏன் பொருட்படுத்த வேண்டும்? அல்லது வேறு விதமாக இவ்வாறும் கூறலாம். அவன் இறைவனை வணங்குபவர்களைப் பொருட்படுத்துகின்றான். துஆக்கள் செய்யக்கூடியவர்களைப் பொருட் படுத்துவான். அவனை வணங்கக் கூடியவர்களைப் பொருட்படுத்துவான். ஆக, அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டுமென்றால் உங்களது நல்ல விருப்பங்களை நிறைவேற்ற விரும்பினால், எதிரிகளின் தோல்வியின் காட்சிகளைப் பார்க்க வேண்டுமென்றால், நாம் இறைவனை வணங்குபவர்களாக ஆவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். உண்மையான ஆபித் ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் நம்மில் எல்லாருக்கும் உணமையான ஆபித் ஆவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! நம்மில் இந்த ரூஹை ஏற்படுத்துவானாக! இதன் மூலம் நாம் எதிரிகளின் முடிவைப் பார்க்கக் கூடியவர்களாக வேண்டும்.

இன்றைய நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி எதிரிகள் தமது உள்ளத்தில் பகைமை, காழ்ப்புணர்ச்சி, பொறாமை ஆகியவற்றை எந்த அளவு நிரப்பியுள்ளனர் என்றால், அது எல்லைமீறி விட்டது. குறிப்பாக பாகிஸ்தானிலும், இந்தியாவின் சில பகுதிகளிலும், அவர்களின் தாக்கத்தின் கீழுள்ள ஆப்பிரிக்காவின் சில முஸ்லிம் நாடுகளின் சில பகுதிகளிலும் இந்த நிலை உள்ளது. எல்லா விதமான கீழ்த்தரமான செயல்பாடுகளும் இவர்களிடமிருந்து வெளியாகிறது. இதில் முதல் அணியில் பாகிஸ்தானின் முல்லாக்களும் பெயர்தாங்கிய ஆலிம்களும் உள்ளனர். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக மிகவும் மோசமான, இழிவான செயலில் ஈடுபடுவதற்கு எந்த சந்தர்ப்பத்தையும் விடுவதில்லை. அஹ்மதிகளின் உள்ளங்களை சல்லடையாக்குவதற்கு வாய்ப்புக்களைத் தேடுகின்றனர். அஹ்மதிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அன்பு மற்றும் விசுவாசமான தொடர்பை ஏற்படுத்தியதற்கு, அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மையான நேசர் ஆவார் என்பதனால் ஆகும். இதுதான் அஹ்மதிகள் செய்த குற்றமாகும்.

அஹ்மதிகளிடம் காணப்படும் இந்த விசுவாசமான தொடர்பு இந்தக் காலத்தில் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது உண்மையான அன்பினை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடத்தில் ஏற்படுத்தியதனால் ஆகும். நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அன்பான தொடர்பு கொள்வது உண்மையான தவ்ஹீதின் அறிவு, ஞானம் ஆகியவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் தான் கிடைத்தது என்பதனால் ஆகும். ஆக, எவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் கொண்ட எதிர்ப்பின் காரணமாக தனது எல்லைகளை மீறுவார்களோ அவர்களது எதிர்ப்பு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது உண்மை நேசர் மற்றும் அல்லாஹ்வின் தவ்ஹீதின் பால் அழைப்பவருடன் ஆகும். எவரை அல்லாஹ் தனது பொறுப்பில் வைத்துள்ளானோ அவருடன் ஆகும்.

**எவ்வாறென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் ஆபிதுகளை (இறைவனை வணங்குபவர்களைப்) பொருட்படுத்துகின்றான். இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விட மிகப்பெரிய ஆபித் வேறு யாருமில்லை.

கடந்த காலத்திலும் நாம் எதிரிகளின் ஒவ்வொரு முடிவையும் பார்த்தோம். இன்றும் பார்க்கின்றோம். பாகிஸ்தானிலும் இதுபோன்ற பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. இந்த அசிங்கங்களைப் பேசக் கூடியவர்களை அல்லாஹ் எவ்வாறு பிடித்தான் என்றால் நிச்சயமாக பலருக்கும் அது படிப்பினையாக அமைந்திருக்கும். அல்லது படிப்பினைக்குக் காரணமாக அமைந்தது. இன்னும் படிப்பினையாக உள்ளது. பாகிஸ்தானிலும் பார்க்கக் கூடியவர்கள் பார்க்கிறார்கள். சில காரணங்களால் சம்பவங்கள் நடைபெற்ற சில இடங்களின் பெயரைக் கூறமாட்டேன். அங்கு அல்லாஹ் தீய வார்த்தைகளைப் பேசக்கூடிய, மோசமாக பேசக்கூடிய மக்களைப் பிடித்தான். தீய வார்த்தைகளைப் பயன்படுத்தும் இவர்களில் பலர் உள்ளனர். அவர்கள் நல்லவர்கள், தூயவர்களாகக் கருதப்பட்டனர். அவர்களின் மீது ஏதாவது அறுவறுக்கத்தக்க பழி சுமத்தி அல்லது ஏதாவது குற்றம் செய்ததன் காரணமாக அவர்களை மிகப்பெரிய சான்றோர் என கருதிய மக்களே அவர்களை இழிவுபடுத்தி தமது பகுதியிலிருந்து வெளியேற்றினார்கள். அல்லது வெளியேறச் செய்தார்கள். மேலும் அல்லாஹ் அவர்களுக்கு இழிவின் காட்சிகளைக் காட்டினான். அதன் மூலம் அவர்களைப் பின்பற்றக் கூடியவர்களை வெட்கப்படவும் அஹ்மதிகளின் ஈமானில் உறுதிப்பாடு ஏற்படவும் செய்தான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஆட்சேபனை செய்யக் கூடியவர்கள் எப்படிப்பட்ட இழிவான செயல்களைச் செய்துள்ளார்கள் என்றால், எனக்கு சில மக்கள் கடிதம் எழுதியுள்ளனர். சில சமயங்களில் பத்திரிகைகளிலும் வெளி வருகிறது. அதனை நான் இங்கு எடுத்துக் கூறவே முடியாது. இவர்கள் எவ்வளவு மோசமான சிந்தனையக் கொண்டுள்ளார்கள். எவ்வளவு மோசமான செயல்களைச் செய்துள்ளார்கள்! மேலும் காலத்தின் இமாமுடன் பகைமை கொண்டுள்ளனர். பாகிஸ்தானைப் பற்றி கூறுகின்றேன். பொதுமக்களில் பெரும் பகுதியினர் உணர்ச்சியற்றவர்களாக இருக்கின்றனர். அல்லது பயப்படுகின்றனர். இதனைப் போன்று இந்தியாவின் சில பகுதிகளிலும் உள்ளது. இந்த அனைத்தையும் பார்த்து இந்த மக்கள் பாடம் கற்பதில்லை. பெயரளவில் இஸ்லாத்தின் மீது அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு ஏற்படக்கூடிய இழிவு அல்லது ஏற்படும் இழிவு போன்றவை அல்லாஹ்வின் அன்பிற்குரியவரை எதிர்ப்பதன் காரணத்தால் ஆகும். கவனம் செலுத்தினால் இந்த விசயங்களே இவர்களது படிப்பினைக்கு அடையாளமாகி விடுகிறது. ஆனால் உலகின் பிற நாடுகளிலும் உதாரணமாக நான் கூறியது போன்று ஆப்பிரிக்காவிலும் சில இடங்களில் எதிர்ப்பு உள்ளது. முஸ்லிம்கள் தமது ஆலிம்களின் இந்த மோசமான நிலையைப் பார்க்கும் போது அவர்களின் கவனம் அஹ்மதிய்யத்தின் பக்கம் திரும்புகின்றது. ஆப்பிரிக்காவில் பல்வேறு பகுதிகளில் அஹ்மதிய்யத் இவ்வாறு பரவியது. தமது ஆலிம்களின் நிலைமையைக் கண்டு சரியான மார்க்கத்தை அவர்கள் கண்டறிந்தார்கள். இவர்களிடம் தைரியம் இருந்ததால் இந்த பெயர் தாங்கி ஆலிம்களிடமிருந்து படிப்பினையைப் பெற்றார்கள். உண்மையைத் தேடினார்கள்.

எவ்வாறாயினும் நான் அஹ்மதிகளிடம் இதனை கூறுகின்றேன். அதாவது அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் தீய நடத்தைகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றைக் கண்டு கவலை அடையாதீர்கள். பாகிஸ்தானிலிருந்து கடந்த சில நாட்களுக்கு முன்பு ஓர் அஹ்மதி எனக்கு கடிதம் எழுதியிருந்தார். அதில் எங்கள் பகுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிர்ப்பு எந்த அளவு உள்ளதென்றால், எதிரிகள் எல்லா

விதமான மோசமான செயல்களையும் செய்யத் துணிந்துள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது படத்தை சிதைத்து அல்லது படத்துடன் இழிவான முறையில் செயல்பட்டு எங்களது உள்ளங்களை சல்லடையாக்குகின்றனர். தற்போது இந்த நிலைமையைக் கண்டு எங்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எங்களது நெஞ்சம் வெடித்து விடுவது போல் இருக்கிறது. அவ்வளவு மோசமான சுவரொட்டிகளை சுவர்களில் ஒட்டுகின்றனர். சில அஹ்மதியல்லாத நல்லியல்பு கொண்டவர்கள் அவர்களது வீட்டுச் சுவர்களிலும் ஒட்டப்பட்ட அந்த சுவரொட்டிகளை, இது எல்லை மீறி செய்யப்படுகிறது என்று கூறி அதனை அகற்றியுள்ளார்கள்.

அவர் எழுதுகிறார்: இதனைக் கண்டு தன்னையும் அறியாமல் அழுகை வருகின்றது. நான் அவர்களுக்கும் பொறுமை மற்றும் துஆவுடன் செயல்படுங்கள் என்றேன். எதிரியின் கூச்சல், குழப்பமும் மோசமான செயல்களும் இருந்தும் கூட அல்லாஹ் நம்முடன் நடந்து கொள்ளும் முறை எத்தகையது என்றால் நாம் முன்னேறிக் கொண்டே செல்கிறோம். ஆக, இந்தப் பாடத்தை நாம் எப்போதும் கண் முன் நிறுத்த வேண்டும். இதுபோன்ற நேரங்களில் துஆவில் முன்பை விட அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். இறைவனுடன் தொடர்பை அதிகப்படுத்தி அவனில் அர்ப்பணம் ஆவதற்கு இதில் பாடம் உள்ளது. இப்படிப்பட்ட மக்கள் தமது மரணத்தைத் தாமே அழைக்கக் கூடியவர்கள் ஆவர். அல்லாஹ்வின் அன்பர்களை இழிவுபடுத்தக் கூடியவர்கள் எப்போதும் அழிந்தும், வீழ்ந்தும் போயிருக்கிறார்கள். இவர்களும் தமது செயல்களிலிருந்து விலகவில்லை என்றால் பிறகு லேக்ராம் மீது எவ்வாறு துஆவின் வாள் வீசியதோ அவ்வாறே இவர்கள் மீது அல்லாஹ்வின் கட்டளை செயல்படும்.

ஆக, உங்களது துக்கம், உங்களது வேதனை, உங்களது அழுகை போன்றவற்றை இறைவன் முன்பு வையுங்கள். அல்லாஹ் இப்படிப்பட்ட தீயவர்களைப் படிப்பினைக்கு ஆளாக்குவானாக!

**1904 ஏப்ரல் 19ம் தேதியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

நான் எனது ஜமாஅத்திற்காகவும், பிறகு காதியானுக்காகவும் துஆ செய்து கொண்டிருந்தேன். அப்போது இந்த இல்ஹாம் இறங்கியது.

*'அவர்கள் வாழ்வின் பொலிவிலிருந்தும் விலகி விட்டனர்.*
*எனவே அவர்களை தூள் தூளாக்கி விடுவாயாக!'*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: எனது உள்ளத்தில் இந்த தூள் தூளாக்கி விடுவதைப் பற்றி என் பக்கம் ஏன் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது எனத் தோன்றியது. அப்போது எனது பார்வை அந்த துஆவின் மீது பட்டது. இது ஒரு வருடத்திற்கு முன்பு பைத்துத்துஆவில் எழுதப்பட்டது. அந்த துஆ இதுவாகும்.

*'என் இறைவா! நீ எனது துஆவை கேட்பாயாக! உனது எதிரியையும், எனது எதிரியையும் துண்டு துண்டாக்கி விடுவாயாக! உனது வாக்குறுதியை நிறைவேற்றி உனது அடியாருக்கு உதவி புரிவாயாக! எங்களுக்கு அந்த நாளை காட்டுவாயாக! எங்களுக்காக உனது வாளை எடுப்பாயாக! நிராகரிக்கக்கூடியவர்களில் எந்தவொரு தீயவரையும் விட்டு விடாதே!'*

நிராகரிக்கக்கூடியவர்கள் பலர் உள்ளனர். சில நிராகரிப்பாளர்கள் தீமைகளில் எல்லை மீறியவர்களாக இருப்பார்கள். ஆக, இந்த துஆ அவர்களுக்கான துஆ ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த துஆவைப் பார்ப்பது, மேலும் இந்த இல்ஹாம் இறங்கியதன் மூலம் இது எனது துஆ ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நேரம் என தெரிய வந்தது.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: எப்போதும் அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறு தான் இருந்து வந்துள்ளது. அவனால் நியமிக்கப்பட்டவர்களின் வழியில் தடையாக இருப்பவர்களை அவன் விலக்கி விடுகிறான். இது இறைவனது மாபெரும் அருளுக்குரிய நாளாகும். அவன் எவ்வாறு இச்செயல்களைச் செய்கின்றான்! இறை இருப்பின் மீது நம்பிக்கையும், உறுதியும் அதிகரிக்கிறது.

அல்லாஹ் இன்றும் அந்தக் காட்சியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்திற்கு காட்டிக் கொண்டுதான் இருக்கின்றான். ஒருபுறம் இந்த ஏச்சுப்பேச்சு; மறுபுறம் முன்னேற்றங்கள். சந்தேகமின்றி நாட்டில் நல்லவர்களும் உள்ளனர். நான் கூறியது போன்று சுவரொட்டிகளை தனது சுவர்களிலிருந்து அகற்றக் கூடியவர்களும் உள்ளனர். ஆனால் இவர்களில் பெரும்பாலாரின் நற்பண்பு ஊமையாக உள்ளது.

ஹஸ்ரத் மூன்றாது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறி வந்தார்கள். நேர்மை இருக்கின்றதுதான். ஆனால் அது ஊமையான நேர்மை; அது பேசாது என்பார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளில் தற்போது எல்லை மீறி வரும் அநீதிக்கு எதிராக எழுத ஆரம்பித்துள்ளது. எவ்வாறாயினும் நாட்டைக் காப்பாற்றுவதற்கு நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த இல்ஹாமிய துஆவை ஓத வேண்டும். இதன் மூலம் தீயவர்கள் அழிய வேண்டும். நாட்டின் நேர்மையாளர்களும் அந்த தீயவர்களின் தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். எல்லாரையும் விட ஒவ்வொரு அஹ்மதியும் இந்த தீயவர்களின் தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

நான் கூறியது போன்று ஒவ்வொரு அஹ்மதியும் முன்பை விட அதிகமாக பொறுமை மற்றும் துஆவுடன் வாழ வேண்டிய அவசியம் உள்ளது. பல்வேறு நேரங்களில், பல்வேறு பகுதிகளில் அஹ்மதிகளுக்கு எதிராக இந்த தீமையை விரும்புபவர்களின் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. ஆனால் நமது இறைவன் திட்டங்களைத் தீட்டுவதில் சிறந்தவனாவான். இவர்களது திட்டங்களை இவர்கள் பக்கமே திருப்பக்கூடியவன் ஆவான். திருப்பிக் கொண்டு இருக்கின்றான். அவன்தான் நம்மை தற்போது வரை அவர்களின் பயமுறுத்தக்கூடிய திட்டங்களிலிருந்து பாதுகாத்துள்ளான்.

எனவே இறைவனை ஒருபோதும் விட்டு விடாதீர்கள். நான் கூறியது போன்று சில நாட்களுக்கு முன்பும் ஜமாஅத்திற்கு இதன் பக்கம் கவனமூட்டியிருந்தேன். உங்களது செயல்களை இறைவனது விருப்பத்திற்கேற்ப அமைத்தவாறு ஒட்டுமொத்தமாக அவன் முன்னால் குனியுங்கள். பிறகு குறுகிய காலத்திலேயே இன்சா அல்லாஹ் புரட்சி ஏற்படும்.

நிரந்தர மனப்பாங்குடன் துஆவின் பக்கம் கவனம் செலுத்துவதைப் பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

துஆ மற்றும் அது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இடைப்பட்ட நேரத்தில், சில சமயங்களில் சோதனைகள் மீது சோதனைகள் வரும். எப்படிப்பட்ட சோதனைகள் வரும் என்றால் அவை இடுப்பை முறித்து விடும். ஆனால் நிரந்தர மனப்பாங்குடையவர் நல்லியல்புடையவர் இந்த சோதனைகள் மற்றும் கஷ்டத்திற்கு இடையிலும் தனது இறைவனின் அருளின் நறுமணத்தை நுகர்கின்றார். தொலைநோக்குப் பார்வையுடன் பார்ப்பார்கள். அதன் பிறகு உதவி வருகிறது. இந்த சோதனைகள் வருவதில் ஒரு இரகசியம் இதுவும் ஆகும். இதன் மூலம் துஆவில் எழுச்சி அதிகரிக்கிறது. ஏனென்றால் எந்த அளவு அழுகையும், மன்றாடலும் அதிகரிக்கிறதோ அதே அளவு உள்ளத்தில் மென்மை ஏற்பட்டுக் கொண்டே செல்லும். இது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வழிமுறைகளில் ஒன்றாகும். எனவே ஒருபோதும் பயப்படக் கூடாது. பொறுமையின்மை, நிம்மதியின்மையினால் அல்லாஹ்வின் மீது தப்பெண்ணம் கொள்ளக் கூடாது. எனது துஆ ஏற்றுக் கொள்ளப்படாது அல்லது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என ஒருபோதும் கருதக் கூடாது. இப்படிப்பட்ட சிந்தனையால் மனிதன் ‘அல்லாஹ் துஆவை ஏற்றுக் கொள்ளக்கூடியவன்’ என்ற பண்பை மறுக்கக் கூடியவனாகி விடுவான். அதாவது அல்லாஹ்வின் பண்பாகிய துஆவை ஏற்றுக் கொள்ளக் கூடியவன் என்பதில் இப்படிப்பட்ட சிந்தனை ஏற்பட்டால், பிறகு மனிதன் அறியாமல் அதனை மறுப்பவனாகி விடுகின்றான்.

எனவே நமது வேலை நமக்குள் உறுதியான நிலைப்பாட்டினை ஏற்படுத்துவதாகும். நாம் அந்த நிபந்தனைகளுடன் துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது. அவற்றில் ஒன்றிரண்டை நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மேற்கோள்களின் மூலம் எடுத்துரைத்தேன். நாம் எப்போதும் அல்லாஹ்வின் சொல் ஒருபோதும் தவறாகாது என்ற நம்பிக்கையில் நிலைநிற்க வேண்டும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ[1]

*பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்ற போது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். (2:187)*

அதாவது துஆவை அதன் நிபந்தனைகளுடன் வேண்டுங்கள்; நான் ஏற்றுக் கொள்வேன்.பிறகு நாம் அவநம்பிக்கை அடைவதற்கு எந்தக் காரணமும் இல்லை. ஆனால் துஆ ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நேரத்தை இறைவன் தான் வைத்துள்ளான். ஒவ்வொரு சோதனையும் நம்மை இறைவன் பக்கம் குனிபவர்களாக ஆக்கும்போது இன்சா அல்லாஹ் பிறகு துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதையும் நாம் பார்ப்போம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மற்றொரு மேற்கோளையும் எடுத்துரைக்கின்றேன்.**

அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள்! பொறுமையின் உச்சத்தை கடைபிடிக்காத எந்தவொரு மனிதனும் துஆவிலிருந்து பலன்பெற முடியாது. உறுதியாக நிலைநிற்றலுடன் துஆவில் ஈடுபடாதவரை துஆவிலிருந்து பயன்பெற முடியாது. ஒருபோதும் தப்பெண்ணம் கொள்ளக் கூடாது. அவனை அனைத்து வல்லமைகளுக்கும், எண்ணங்களுக்கும் எஜமானனாகக் கருத வேண்டும். நம்பிக்கை வைக்க வேண்டும். பிறகு பொறுமையுடன் துஆவில் ஈடுபட வேண்டும். நேரம் வந்து விடும் போது அல்லாஹ் அவனது துஆவை கேட்பான். அவனுக்கு பதிலளிப்பான். யார் இந்த முறையைக் கடைபிடிப்பாரோ அவர் ஒருபோதும் துரதிர்ஷ்டவாதியாகவும், தடுக்கப்பட்டவராகவும் ஆகமாட்டார். மாறாக நிச்சயமாக அவர்கள் தனது குறிக்கோளில் வெற்றி பெறுவார்கள். இறைவனுடைய வல்லமைகளும், ஆற்றல்களும் எண்ணிலடங்காமல் உள்ளன. அவன் மனிதனின் முழுமைக்காக அதிக பொறுமைக்கான சட்டத்தை வைத்துள்ளான். எனவே அவன் அதனை மாற்றுவதில்லை. எவர் தனக்காக அந்த சட்டத்தை மாற்ற வேண்டுமென விரும்புவாரோ அவர் இறைவன் முன்பு அவமரியாதையுடன் ஆணவம் காட்ட முயல்கிறார் என்பதாகும்.

பிறகு இதனையும் நினைவில் கொள்ள வேண்டும். சில மக்கள் பொறுமையின்மையை மேற்கொள்கின்றனர். மந்திரவாதியைப் போன்று உடனே எல்லாம் நடந்து விட வேண்டும் என விரும்புகின்றனர்.

நான் கூறுகின்றேன். யாராவது பொறுமையின்மையை மேற்கொண்டால், அந்த பொறுமையின்மை மூலம் இறைவனுக்கு என்ன பாதிப்பை ஏற்படுத்தி விட முடியும்? அவர் தனக்கே தீங்கிழைத்துக் கொள்வார். பொறுமையின்மையை கடைபிடித்தால் அவர் எங்கு போவார்? என்பதைப் பார்க்கட்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் யாகூப் (அலை) அவர்களது பிரியமான மகன் ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்கள் தனது சகோதரர்களின் சூழ்ச்சியின் காரணத்தால் அவர்களிடமிருந்து பிரிந்த போது, ஹஸ்ரத் யாகூப் (அலை) அவர்கள் 40 வருடங்கள் வரை அவர்களுக்காக துஆ செய்து வந்தார்கள். அவர்கள் அவசரப்பட்டிருந்தால் எந்த விதமான விளைவும் ஏற்பட்டிருக்காது. 40 வருடங்கள் வரை துஆவில் ஈடுபட்டிருந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் வல்லமையின் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். இறுதியில் 40 வருடங்கள் கழித்து அந்த துஆக்கள் ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களை இழுத்து வந்தது. மேலும் இந்தக் காலகட்டத்தில் சில வசைமொழி பேசக்கூடியவர்கள் நீர் யூசுஃபை தேவையில்லாமல் நினைத்துக் கொண்டிருக்கின்றீர் என்று கூறினர். இறைவனிடம் நீங்கள் அறியாததை அறிவேன் என்றார்கள். அவர்களுக்கு எவ்வகையிலும் விசயம் தெரியாது. ஆனால் அவர், – நிச்சயமாக நான் யூசுஃபின் நறுமணத்தை நுகர்கின்றேன் (12:95) என்றார். ஆரம்பத்தில் துஆவுடைய காலகட்டம் மிக நீளமானது என்பது மட்டும் தான் தெரிய வந்தது. அல்லாஹ் ஒருவேளை துஆவிலிருந்து தடுக்க வேண்டுமென்று இருந்தால் பிறகு அவன் விரைவாக பதிலளித்திருப்பான். ஆனால் இங்கு துஆவின் காலகட்டம் நீடித்திருப்பது ஏற்றுக் கொள்ளப்படுவதன் ஆதாரமாகும். ஏனென்றால் கருணையுடைய ஒருவர் பிச்சைக்காரரை

நீண்ட நேரம் உட்கார வைத்து விட்டு, பிறகு தானம் கொடுக்காமல் அனுப்பமாட்டார். மாறாக கஞ்சத்திலும் கஞ்சன் கூட அவ்வாறு செய்ய மாட்டான். அவனும் பிச்சைக்காரனை நீண்ட நேரம் வாசலில் உட்கார வைத்தால் இறுதியில் ஏதாவது கொடுத்து விடுவான்.

பிறகு நமது துஆ, நமது இதயத் துடிப்பு, நமது உள்ளம் சல்லடையாவது ஆகியனவெல்லாம் நாம், நம் மீது அநீதி இழைத்ததன் காரணமாக அல்ல. மாறாக, நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டதன் காரணமாகத்தான் இந்த அநீதிகளுக்கு இலக்காகி உள்ளோம். அல்லது இலக்காகியிருக்கின்றோம். நாம் இந்த அநீதிகளுக்கு இறைவனுடைய அன்பர் மற்றும் பிரியமானவரை ஏற்றுக் கொண்டதன் காரணமாகத்தான் இலக்காகின்றோம். எனவே, நிச்சயமாக நாம் இறைவனுக்காக இவ்வனைத்தையும் பொறுத்துக் கொள்கின்றோம். அவனுக்காக நாம் சகித்துக் கொள்கின்றோம் என்றால் அவன் கண்டிப்பாக நமது துஆவை கேட்பான். மேலும் கேட்டுக் கொண்டிருக்கின்றான். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றம் இதற்கு ஒரு வெளிப்படையான சான்றாகும். இறைவன் நம்முடன் இருக்கின்றான். நான் கூறியது போன்று எதிரியின் திட்டங்கள் தீவிரமானதாக இருந்தது. இருக்கவும் செய்கின்றது. இது அல்லாஹ்வின் அருளும் கருணையும் ஆகும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்யப்பட்ட வாக்குறுதிகள் ஆகும். நமது ஈமானில் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காக இறைவன் இக்காட்சிகளைக் காண்பிக்கின்றான். எதிரிகளுடைய திட்டங்களை பல இடங்களில் முறியடிக்கின்றான். பாகிஸ்தானில் மட்டுமல்ல. மாறாக உலகின் பல்வேறு நாடுகளில் எதிர்ப்பு உள்ளது. ஆனால் ஜமாஅத்தின் முன்னேற்றம் நின்றுவிடவில்லை. ஐரோப்பிய பாராளுமன்றத்தில் உரையாற்ற நான் சென்ற போது, ஒரு பத்திரிகையின் பிரதிநிதி என்னிடம், ஏனைய முஸ்லிம்களின் மத்தியில் உங்களுக்கு என்ன மதிப்பு இருக்கின்றது? உங்களது எண்ணிக்கை எவ்வளவு? எனக் கேட்டார். அப்போது எனக்கு எண்ணிக்கையைப் பற்றி கேட்ட பிறகு அவர் இந்தக் கேள்வியைத்தான் கேட்பார். அதாவது உலகில் நீங்கள், அமைதிக்கான போதனையை வழங்குகின்றீர்கள். அதனைப் பரப்ப விரும்புகின்றீர்கள். ஆனால் இந்த சிறிய எண்ணிக்கையைக் கொண்டுள்ள உங்களால் என்ன செய்ய முடியும்? என்பதாக இருக்கும் என்ற சிந்தனை தோன்றியது.

அப்போது எனக்கு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுடைய பதில் நினைவுக்கு வந்தது. இதனை அன்னார் ஐரோப்பாவின் ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டரிடம் எண்ணிக்கையில் எவ்வளவு உள்ளீர்கள் என்ற அவரது கேள்விக்குப் பதிலாக கூறினார்கள்:

இன்றிலிருந்து 93 வருடங்களுக்கு முன்பு ஒருவராக இருந்தவர் இன்று 1 கோடி பேர் வரை உள்ளனர். வருங்காலத்தில் நாங்கள் எவ்வளவு இருப்போம் என்பதைக் கணித்துக் கொள்ளுங்கள் என்றார்கள்.

நானும் அவரிடம் தற்போது அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டு 123 வருடங்கள் கடந்து விட்டன. இறை அருளால் நாங்கள் கோடிகளின் எண்ணிக்கையில் இருக்கின்றோம். உலகில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு ஜமாஅத் ஆக திகழக்கூடிய காலம் மிக அருகில் இருக்கின்றது இன்சா அல்லாஹ் என்றேன். நான் இந்தப் பதிலைக் கூறிய பிறகு அவரிடம் உங்களது கேள்வி இதுவாகத்தான் இருந்தது. திருப்தி கிடைத்ததா? என்றேன். அவரும் ஆமாம்; எனது சிந்தனையிலும் இதுதான் இருந்தது என்றார். ஆனால் நாம் இதனை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது நமது தாக்கம், உலகக் குறிக்கோளை அடைவதற்காக இருக்காது. மாறாக, இறைவனது ஆட்சியை உலகில் நிலைநிறுத்துவதற்காக, உலகில் அன்பு, நேசம் போன்றவற்றைப் பரப்புவதற்காக இருக்கும்.

எனவே பகைவர்களின் அநீதி நம்மை நமது குறிக்கோள் –களிலிருந்து தடுத்து விடும் அல்லது முன்னேற்றத்தில் தடையாக இருப்பார்கள் என நாம் எவ்வகையிலும் கவலையடையத் தேவையில்லை. முன்னேற்றத்தை இறைவன் காண்பித்துக் கொண்டிருக்கின்றான். முன்னேற்றத்தின் காட்சிகளை மட்டும் காண்பிக்கவில்லை. மாறாக வருங்கால வாழ்வில் தனது அன்பர்களுடன் இணையக் கூடியவர்கள் மற்றும் அவர்களை எதிர்க்கக்கூடியவர்களின் நிலையினைப் படம்பிடித்துக் காட்டி நமது திருப்தி மற்றும் நிம்மதிக்கான ஏற்பாட்டை அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். நான் ஆரம்பத்தில் ஓதிய வசனங்கள் அந்த நிலைமைகளை விளக்குகின்றன.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்**

قَالُوا رَبَّنَا غَلَبَتْ عَلَيْنَا شِقْوَتُنَا وَكُنَّا قَوْمًا ضَالِّينَ ۝ رَبَّنَا أَخْرِجْنَا مِنْهَا فَإِنْ عُدْنَا فَإِنَّا ظَالِمُونَ ۝
قَالَ اخْسَئُوا فِيهَا وَلَا تُكَلِّمُونِ ۝ إِنَّهُ كَانَ فَرِيقٌ مِنْ عِبَادِي يَقُولُونَ رَبَّنَا آمَنَّا فَاغْفِرْ لَنَا
وَارْحَمْنَا وَأَنْتَ خَيْرُ الرَّاحِمِينَ ۝ فَاتَّخَذْتُمُوهُمْ سِخْرِيًّا حَتَّىٰ أَنْسَوْكُمْ ذِكْرِي وَكُنْتُمْ مِنْهُمْ
تَضْحَكُونَ ۝ إِنِّي جَزَيْتُهُمُ الْيَوْمَ بِمَا صَبَرُوا أَنَّهُمْ هُمُ الْفَائِزُونَ ۝

*பொருள்: எங்கள் இறைவா! எங்கள் துரதிர்ஷ்டம் எங்களை வென்றுவிட்டது. நாங்கள் வழிதவறிய கூட்டத்தினராக இருந்தோம்.*

*எங்கள் இறைவா! எங்களை இ(ந்த நரகத்)திலிருந்து வெளியேற்றி விடுவாயாக! இதன் பின்னர் நாங்கள் (அந்தப் பாவங்களின் பால்) திரும்பினால் நிச்சயமாக நாங்கள் அநீதியிழைப்பவர்களாவோம்.*

*(இறைவன்) கூறுவான்: நரகத்திற்குச் சென்று விடுங்கள். என்னிடம் பேசாதீர்கள்!*

*நிச்சயமாக என் அடியார்களுள் இவ்வாறு கூறிய ஒரு பிரிவினர் இருந்தனர்: எங்கள் இறைவா! நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே நீ எங்களை மன்னித்து எங்களுக்குக் கருணை காட்டுவாயாக! மேலும் நீ கருணைகாட்டுபவர்களுள் சிறந்தவனாவாய்.*

*அவர்கள் (உங்களின்) நகைப்பிற்குரிய பொருளாகி உங்களை என்னை நினைவு கூர்வதை மறக்கச் செய்யும் வரை நீங்கள் அவர்களை ஏளனத்திற்கு ஆளாக்கினீர்கள். மேலும் நீங்கள் அவர்களைக் கண்டு சிரித்துக் கொண்டே இருந்தீர்கள்.*

*அவர்கள் பொறுமை காட்டியதனால் இன்று நான் அவர்களுக்கு(ப் பொருத்தமான) நற்பலன் வழங்குவேன். நிச்சயமாக அவர்களே வெற்றி பெற்றவர்களாவர். (23:107-112)*

எனவே இதுதான் எதிர்க்கக்கூடியவர்களின், வாழ்வின் பொலிவிலிருந்து தூரம் விலகிச் சென்றவர்களின் விளைவாகும். மறுமையில் சென்ற பிறகு அவர்களுக்கு உண்மை விளங்கும் போது பிறகு அவர்கள் எங்கள் துரதிர்ஷ்டம் எங்களைச் சுற்றி வளைத்து இங்கு வரை கொண்டு வந்து விட்டது. எங்கள் இறைவா! எங்களை ஒருமுறை திருப்பி அனுப்பி விடு! நாங்கள் வரம்புமீற மாட்டோம். நாங்கள் அவ்வாறு செய்தோம் என்றால் அநீதியிழைக்கக்கூடியவர்களாகி விடுவோம் என்று கூறுவர். ஆனால், இறைவன் எனது சட்டத்தில் அதற்கு அனுமதி கிடையாது எனக் கூறுவான். இப்போது நீங்கள் செய்தவற்றிற்கு தண்டனை அனுபவியுங்கள். என் முன்பிருந்து தூர விலகிச் செல்லுங்கள். இப்போது உங்களது தங்குமிடம் நரகம் ஆகும். அதிலேயே நுழையுங்கள். நான் இப்போது உங்களது எந்தவித அழுகையையும், மன்றாடலையும் கேட்கமாட்டேன் என்பான். இறைவன் யாருடைய அழுகையையும், மன்றாடலையும் கேட்க வேண்டும் என்றால் உலகில் நற்செயல்கள் செய்தவர்களிடம் கேட்பான். இங்கு அநீதியிழைத்த பிறகு மறுமையில் சென்று மன்றாடுபவர்களிடம் கேட்க மாட்டான்.

எனவே இறைவன் தனது அன்பிற்குரியவரை எதிர்க்கக் கூடியவர்களிடம் நடந்து கொள்ளும் முறையைக் கூறியுள்ளான். தனது அடியாரின் பாவமன்னிப்பைக் கேட்க எந்நேரமும் காத்திருக்கக்கூடிய அந்த இறைவன், அப்போது அதனை மறுத்து விடுவான். காலம் கடந்து விட்டது என்பான். இங்கு செயல்களுக்கான கூலி கிடைக்கும். நீங்கள் உலகில் செய்து வந்த அமல்கள் உலகில் எனது அடியார்களின் உள்ளத்தை சல்லடையாக்கி விட்டு வந்துள்ளீர்கள். என் முன்னால் குனியக் கூடியவர்கள்; எனது மார்க்கத்தின் கண்ணியத்தை நிலைநாட்ட முயற்சி செய்யக் கூடியவர்களுடன் நீங்கள் நடந்து கொண்ட முறை அவர்கள் எனது பணியை முன்னே எடுத்துச் செல்ல விரும்பிய போது நீங்கள் அதில் தடைகளை ஏற்படுத்த முயற்சிகளைச் செய்தீர்கள். நீங்கள் மற்றவர்களைக் கேட்பதை விட்டும் தடுத்தீர்கள். மேலும் அவர்கள் மீது எல்லை மீறி அநீதியிழைத்தீர்கள். எனது பெயரில் கலிமா கூறக்கூடியவர்களை நீங்கள் நகைப்பிற்கும், ஏளனத்திற்கும் இலக்காக்கினீர்கள். மேலும் அவர்களுடைய இரத்தத்திலும் விளையாடினீர்கள். இப்போது மன்னிப்பு எந்த விசயத்திற்கு? இன்று உங்களுடைய எந்த கூற்றும் கேட்கப்படமாட்டாது. செல்லுங்கள். உங்களது தங்குமிடமாகிய நரகத்திற்குச் சென்று தங்குங்கள் என்று கூறுவான்.

அல்லாஹ் கூறுவான்: நிச்சயமாக எனது அந்த அடியார்கள், எனது கட்டளைக்கேற்ப, எனது வாக்குறுதிக்கேற்ப வரக்கூடிய அன்பர் மீது ஈமான் கொண்டுள்ளார்கள். அவர்கள் தான் நான் கருணை புரிவதற்குத் தகுதியானவர்கள். அவர்களுடைய கூற்றுக்களைக் கேட்பேன். அவர்களுக்கு எனக்கு விருப்பமான சொர்க்கத்தில் இடமளிப்பேன். உலகில் அவர்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளுக்குரிய கூலி அன்பின் பார்வை மூலம் கொடுப்பேன். இவ்வுலகின் கூலியை மறுமையில் பன்மடங்கு உயர்த்தி வழங்குவேன்.

அல்லாஹ் கூறுவான்: எனது அடியார்கள் மீது அநீதியிழைத்துக் கொண்டே சென்ற மக்களே! அவர்கள் மீது அநீதியிழைப்பதும் அவர்களை ஏளனம் செய்வதும் எனது நினைப்பை விட்டு உங்களைத் தடுக்கும் அளவுக்கு குருடாகி விட்டதா? தெரிந்து கொண்டே மூஃமின்களின் உள்ளங்களைக் காயப்படுத்துவது, அவர்களைக் கொலை செய்வது உங்களை நரக நெருப்பின் பக்கம் இழுத்துச் செல்லும் என்ற எனது கட்டளையை மறந்து விட்டீர்களா?

மேலும் நீங்கள் அல்லாஹ் மற்றும் அவனது படைப்பினங்களின் உரிமையைச் செலுத்துவேன் என்று செய்த உறுதிமொழியை மறந்து விட்டீர்களா? எனக் கூறுவான். இறைவனது கட்டளைகளை மறந்திருக்கிறீர்கள். அவனது நினைவிலிருந்து கவனமற்றவர்களாக ஆகி விட்டீர்கள். அல்லாஹ்வுடைய கட்டளைகளை தனது விருப்பத்திற்கேற்ப மாற்றிக் கொள்ள முயலுகின்றீர்கள். இப்போது உங்களுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. நீங்கள் அநீதியிழைக்கப்பட்டவர்களின் சொத்துக்களை அபகரித்தீர்கள். அதனை தீ வைத்துக் கொளுத்தினீர்கள். அவர்களது வியாபாரத்தில் இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்தீர்கள். கூட்டு வியாபாரம் என்றால் அவர்களது பணத்தை விழுங்கி விட்டீர்கள். இந்த வகையில் நீங்கள் செய்து வந்த பாவங்களின் மிக நீண்ட பட்டியல் உள்ளது. எனவே இப்போது உங்களுக்கு நரக நெருப்பு தான் தீர்வாகும் என திருக்குர்ஆன் கூறுகின்றது. எந்த விதமான மென்மை பற்றியும் மன்னிப்பு பற்றியும் என்னிடம் பேசாதீர்கள்.

பிறகு ஈமான் கொண்டவர்கள், கருணை மற்றும் மன்னிப்பை வேண்டக் கூடியவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுவான்: நிச்சயமாக இன்று உங்களது பொறுமை, உறுதியான நிலைநிற்றல், ஈமானில் உறுதிப்பாடு மற்றும் என்னுடன் தொடர்பு கொண்ட காரணத்தினால், என் முன்னால் குனிந்ததன் காரணத்தினால் எனது அடியானான காரணத்தினால் நீங்கள் வெற்றி பெற்ற மக்களுடன் இணைய உள்ளீர்கள். அல்லாஹ்வின் அன்பிற்குரியவர்கள் ஆவீர்கள். அல்லாஹ்வின் கருணை மற்றும் மன்னிப்பைப் பெறக்கூடியவர்கள் ஆவீர்கள்.

எனவே இதுதான் இந்த வசனங்களின் அடிப்படையில் நம்பிக்கை கொண்டவர் மற்றும் நம்பிக்கை கொள்ளாதவரின் வேறுபாடாகும். அல்லாஹ் நம்மை அவனது கருணை மற்றும் மன்னிப்பைப் பெறக்கூடிய மக்களுடன் இணைப்பானாக! நமது எல்லா விதமான குறைகளின் மீதும் பலவீனங்களின் மீதும் திரையிடுவானாக! உறுதியான நிலைநிற்றலுடன் துஆவின் பால் நமது கவனம் இருக்கட்டுமாக! வெற்றியாளர்களில் நாமும் இணைவோமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH MOSQUE, London.
on **15.03.2013**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456